

# இயற்கைக்கு நிகழும் சிலுவைப் பாதை


**அருள்பணி பீ. அன்புராஜ்**

திருச்சி மறைமாவட்டம்

***முன்னுரை:***

*அன்புள்ளம் கொண்ட சகோதரிகளே! சகோதர்களே! என் குரல் கேட்கின்றதா? நான் தான் உங்கள் ஆதிபெற்றோர்களான ஆதாமுக்கும், ஏவாளுக்கும் முன்பே, பரமனால் படைக்கப்;பட்டு, அவரால் நல்லது என காணப்பட்ட, இயற்கை பேசுகிறேன். இறைவனின் மகன் சிலுவை சுமந்து பட்டபாடுகளை, தியானிக்கும் வேளையில், நான் ஏன் பேச வேண்டும் என நீங்கள் கேட்கலாம்? என்ன செய்வது! கருணை மனம் கொண்ட இயேசுவின் மீட்புக்கான இந்த சிலுவை தியாகம், மனிதர்களாகிய உங்களுக்கு மட்டுமல்ல, படைப்புகளாகிய எங்களுக்குமானது என்பதை என்றாவது நீங்கள் உணர வேண்டும்., என்பதற்காக பேசுகிறேன். இயேசுவின் தலைமைச் சீடரான பேதுருவின், அரியணையில் அமர்ந்து திருஅவையை வழிநடத்தும், நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2015ம் ஆண்டில் அவர் 'எல்லா புகழும் உமக்கே' என்ற தலைப்பில் வெளியிட்ட சுற்று மடல் முழுக்க முழுக்க எங்களை மையப்படுத்தியது என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? அந்தச் சுற்று மடலில் இருக்கும் வார்த்தைகள் அனைத்தும், எங்களை நீங்கள் சுரண்டியதனால் ஏற்பட்ட காயத்திற்கு மருந்துகள் என்பது மட்டும் உங்களுக்கு தெரிந்திருக்கவா போகிறது? இயேசுவின் தோளை அழுத்திய சிலுவையின் பாரம், உங்கள் பாவங்கள் என்பது உங்களுக்குத் தெரியும், ஆனால் எங்களை உங்கள் பேராசையால் அழித்தீர்களே, அவையும் உங்களின் பாவ பட்டியலில் சேர்ந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? இன்று இந்த சிலுவை பாதையின் 14 நிலைகளிலும் இயற்கையான எங்களுக்கு எதிராக, நீங்கள் செய்த செயல்கள் எவ்வாறு இயேசுவின் துன்பத்தை அதிகப்படுத்தியது என்பதை, புரிந்து கொள்வதற்கான வாய்ப்பாக இருக்கட்டும். உங்களுக்காக நன்மை மட்டுமே செய்த இயேசுவை, கொடூரமாக கொலை செய்த உங்களின் மனநிலை, இன்றளவும் மாறவில்லை என்பதை எங்களின் நிலையைப் பார்த்து உங்களுக்கு புரிய வேண்டும். அப்படி புரியவில்லை என்றால் இந்த சிலுவை பாதையின் வழியாக எங்கள் வலிகளை அறிந்து கொள்ளுங்கள் மனம் மாறுங்கள் எங்களை அன்பு செய்யுங்கள்.....*

***1. தீர்ப்பிடுதல்***



*மனிதர்களாகிய நீங்கள் அதிகமான நேரத்தில் தவறாக செய்கின்ற செயல் இந்த தீர்ப்பிடுதலாகும். உங்கள் சமூகத்தில் நீதி, அநீதியை தீர்ப்பிட்ட நேரங்களைவிட அநீதி, நீதியை தீர்ப்பிட்ட தருணங்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளது. உங்களின் இந்த அநீதியான தீர்ப்புக்கு இறைமகன் இயேசுவும் தப்பவில்லை, இயற்கையாகிய நாங்களும் தப்பவில்லை, என்பதை மறந்துவிடாதீர்கள். நாட்டின் வளர்ச்சி என்ற பெயரால், எங்களின் வளங்களை எல்லாம் சுரண்டி எடுக்கிறீர்கள், அது நாட்டின் வளர்ச்சி இல்லை; வீழ்ச்சி என்பது உங்களுக்குத் தெரிவதே இல்லை. எல்லோருடைய தேவைகளையும் சந்திக்கும் அளவுக்கு எங்களிடம் வளம் உள்ளது. ஆனால் சுயநலம் பிடித்த தனிநபர்களின் பேராசைகளை பூர்த்தி செய்ய எங்களால் முடியாது என்பது ஏன் உங்களுக்கு புரியவில்லை? மலையை உடைத்து கிரானைட் எடுப்பது, ஆற்றுப்படுகை மணலை எல்லாம் எடுப்பது, நிலத்தடி நீரை பெரும் பன்னாட்டு நிறுவனம் உறிஞ்சுவது, அனல்மின்நிலையம் என்ற பெயரால் எங்களை நிர்மூலமாக்குவது இவற்றுக்கெல்லாம் நீங்களும் உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளும் அனுமதி அளிப்பது, அநீதியான தீர்ப்பு என்பதை இன்றாவது புரிந்து கொள்ளுங்கள். இயேவுக்கு அநீதியான தீர்ப்பு வழங்கிய போது அதனை முன் மொழிந்த கயவர்களைவிட எனக்கும், இதற்கும் தொடர்பில்லை என்று கை கழுவிய பிலாத்துதான் இன்றுவரை அந்த தீர்ப்புக்கு பொறுப்பாளனாக உள்ளான். அதுபோல் இயற்கையான எங்களுக்கு நிகழும் அநீதிகளை கண்டு கொள்ளாமல் ஒதுங்கி கொள்ளும், மனநிலை கொண்ட நீங்களும் பிலாத்துவின் வாரிசுகள் என்பதை மறந்துவிடாதீர்கள்.*

***செபம்:***

*இறைவா! இனியாவது இயற்கை வளங்களை சுரண்டும் நிலையை கண்டும், காணாமல் கை கழுவும் பிலாத்தாக இல்லாமல், அந்த அநீதியான தீர்ப்புக்கு எதிராக போராடும் மனதையும், வலிமையையும் எங்களுக்குத் தாரும்....*

### *2. சிலுவையைச் சுமத்தல்*



*‘ஆடுகள் வாழ்வு பெற அதுவும் நிறைவாழ்வு பெறவே வந்தேன்’ என்று கூறிய இறைமகன் இயேசுவுக்கு, நீங்கள் தந்தப் பரிசு சிலுவை. நன்மை செய்ய வருகின்ற நல்லவர்களுக்கெல்லாம், துன்பத்தை தர நன்றி மறந்த மக்களாகிய உங்களால் மட்டும் தான் முடிகிறது. நீங்கள் பயன்படுத்தி தூக்கி எறியும் கலாச்சாரத்தின் வாரிசுகள் என்பதை, நீங்கள் எங்கள் மேல் கொட்டும் மக்காத குப்பைகளே, இதனை உறுதிப்படுத்துகின்றன. நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில், எத்தனை பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளன என்பதை, ஒரு நிமிடம் கண்மூடி யோசித்துப் பாருங்கள். நீங்கள் கடைகளில் கேட்டு கேட்டு வாங்கும் நெகிழி (பிளாஸ்டிக்) பைகளை எண்ணிப் பாருங்கள் , அவை ஒவ்வொன்றும் மக்கி போவதற்கு 400 ஆண்டுகள் ஆகும். நீங்கள் பயன்படுத்தி குப்பையென தூக்கி எறியும் மக்காத பிளாஸ்டிக் எல்லாம் எங்கள் தோளில் நீங்கள் சுமத்தும் சிலுவைகள், என்கின்ற உண்மை இப்பொழுது தெரிகிறதா? இயேசு சுமந்த சிலுவை, சில மணி நேரங்கள் அவர் தோளை அழுத்தியது. எங்கள் மீது நீங்கள் சுமத்தும் இதுபோன்ற கழிவுகள், இயேசுவின் தோளை முடிவில்லாமல் அழுத்திக் கொண்டுதான் இருக்கும். காரணம் நீங்கள் துன்பப்பட்டால் எவ்வாறு இயேசு துன்பபடுவாரோ, அதுபோல் நாங்கள் துன்புறுத்தப்படும் போதும், நிச்சயமாக இயேசுவும் துன்புறுத்தப்படுகின்றார்.*

**செபம்:**

*அன்பு இயேசுவே! இனியாவது பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்து, உமது தோளில் இருக்கும் சிலுவையின் சுமையை, அதன் வாயிலாகக் குறைக்க முயற்சி எடுக்கும் மனப்பக்குவத்தை எங்களுக்கு நிறைவாகத்தாரும்!*

### *3. முதன் முறை விழுதல்*




*மனித சமூகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என விரும்பிய இறை (மனிதன்) மகன் அதே மனித சமூகத்தில் விழுந்து கிடக்கிறார். சிறுவனாய் இருந்த போது இயற்கையாகிய எனது மடியான நிலத்தில், புரண்டு விளையாடி என்னைப் புனிதப்படுத்திய புண்ணியவான். இயேசு, மீண்டும் என் மடியில் விழுந்து கிடக்கிறார். மனிதர்களாகிய நீங்கள் தள்ளிவிட்டவரை, இயற்கையாகிய எனது மடியான நிலம் தாங்கி கொண்டது. அன்று மட்டுமல்ல இன்றளவும் தாங்கி கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் எங்களை துளைத்து நீர் எடுக்கும் போதும், விளைநிலத்தை கூறுபோட்டு கூவி விற்கும்போதும், உரம் என்ற பெயரால் விஷத்தை கொட்டும் போதும், தாதுக்கள் எடுக்கிறேன் என்ற பெயரால் நிலத்தை தரிசாக்கிய போதும், எரிவாயுவும் நிலக்கரியும் எடுக்க என்னை மலடாக்கிய போதும் நான் உங்களை தூக்கி எறியாமல், தூக்கி சுமந்து கொண்டுதான் இருக்கிறேன். இத்தனை கொடுமைகள் நிகழ்த்தப்பட்ட போதும், எப்போதாவது நான் ஒரு கர்ப்பிணி பெண் தன் கருவில் உள்ள சிசுவிற்கு ஏதுவும் ஆகிவிடக்கூடாது, என கவனமாக புரண்டு படுப்பது போல் என் நில அடுக்கை சரி செய்யும் போது ஏற்படும், சிறு அதிர்விற்கே நிலநடுக்கம், சுனாமி என பயந்து போகிறீர்களே. உங்களை அச்சுறுத்த அல்ல, மாறாக நிதர்சனமான புவியியல் உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இயற்கையாகிய நாங்கள் அங்கலாய்கின்றோம் சற்றே சிந்தியுங்கள்.*

**செபம்:**

*அன்பு இயேசுவே! நீர் வாழ்ந்த, நடந்த இந்த நிலத்தை நாங்கள் வதைத்த நேரங்களை நினைத்து மனம் வருந்துகிறோம். நிலத்தை எங்கள் தாய்மார்களுக்கு இணையாக மதித்து உணர்ந்து அதனைக் காக்கத் தேவையான வரங்களை எங்களுக்கு நிறைவாகத் தாரும்.*

### *4. தாயை சந்தித்தல்*




*ஒரு மகனை தாய் எந்த கோலத்தில் பார்த்தால், இதயம் பதறிப்போவாளோ, அந்த கோலத்தில் நிகழ்கிறது இயேசுவுக்கு அவருடைய தாயுடனான சந்திப்பு. மார்போடு அணைத்து அமுதூட்டிய மகனைக் கண்டு, மாரடைத்து நிற்கிறாள் அன்னை மரியாள். வானத்து பறவைகளையும், வயல் வெளிப்பூக்களையும், பார்த்து ரசிக்க இயேசுவுக்கு சொல்லிக் கொடுத்தவள், இந்த தாய் தான் என்பது எனக்கு நன்கு தெரியும். அன்று இந்த அன்னை, தன் மகனாம் இயேசுவை ஈன்றெடுக்க நீங்கள் இடம் கொடுக்கவில்லை. ஆனால் இயற்கையாகிய எங்களின் தோழர்களான ஆடுகளும், மாடுகளும் தானே இடம் கொடுத்தன! இயற்கையாகிய எங்களோடு இணைந்து வாழ்ந்த கன்னிமரியாள் தன் மகனின் கோர நிலைக்கண்டு கலங்கி நிற்கிறாள். இவளை விண்ணுக்கும், மண்ணுக்கும் தாயென்றால் இயற்கையாகிய எங்களுக்கும், அவள் தான் தாய் என்பதை ஏன் மறக்கிறீர்கள் என்பது எனக்குப் புலப்படவில்லை. அன்று இயேசுப்பட்ட துன்பங்களுக்கு இணையாக நாங்களும் சிதைக்கப்பட்டு நிற்கின்றோம். அவள் இன்றும் எங்களுக்காக கண்ணீர் வடிக்கிறாள். மரியாளின் மகன் இயேசு தனது முதல் புதுமையை, இயற்கையான எங்களில் ஒருவரான நீரை இரசமாக்கி நிகழ்த்தி அன்னையை மகிழச் செய்தார். அவளது பிள்ளைகளாகிய நீங்கள் இன்று, ஆற்று நீரையெல்லாம் கழிவாக்கி, அசுத்த நீராக்கி அவளின் மனம் நோக செய்வது சரியா? யோசித்துப் பாருங்கள்.*

**செபம் :**

*அன்பு இயேசுவே! உன் துயர நிலை கண்டு மட்டுமல்ல இயற்கையின் மாசுபடுத்தப்பட்ட நிலைக்கண்டும் அன்னை மரியாள் மனம் நோக அழுகின்றாள் என்பதை உணர்ந்து மனம் வருந்துகிறோம்! இயற்கையை அன்பு செய்வது அன்னையின் காயப்பட்ட மனதிற்கு மருந்தாக எங்கள் வாழ்வு அமைய வரமருளும்.........*

### *5. சீமோனின் உதவி*




*தொட்டு குணப்படுத்திய தொழுநோயார்களோ, அப்பத்தையும், மீனையும் வாங்கி உண்ட மக்கள் கூட்டமோ, மூன்றாண்டுகளாக உடன் பயணித்த சீடர்களோ அல்ல, உதவிக்கு வந்த சீமோன். இயேசுவை அறியாதவன் உதவுகிறான், அதனால் அவன் பெயர் உச்சரிக்கப்படுகின்றது. இயேசுவின் பாடுகள் தியானிக்கப்படும் மனங்கள் அனைத்திலும். உதவும் கரங்கள் உள்ளன்போடு என்றும் நினைவு கூறப்படும் என்பதற்கு, இது நல்ல உதாரணம். இயற்கையாகிய எங்களை கொள்ளையடித்து வாழ்வு பெற்றவர்கள் எங்களை கண்டு கொள்ளவில்லை. ஆனால் எங்களின் இந்த அவல நிலைக் கண்டு போராட்டத்தில் குதித்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், அணு உலைகள் இயற்கைக்கு எதிரி என்று கூறி பெரும் போராட்டம் நடத்திய உதயகுமார், பூவுலகின் நண்பர்கள் என்ற இயக்கத்தினர், இது போன்று எத்தனையோ சீமோன்கள் இன்றளவும் எங்கள் துன்பங்களைத் துடைக்கப் போராடி, இயேசுவின் சிலுவையை சுமக்க தங்கள் தோள்களை கொடுத்து வருகிறார்கள். இந்த சீமோன்கள் தங்களை இயேசுவின் சீடர்கள் என்று உங்களை போல் சொல்லி கொள்ளவில்லை, ஆனால் இயேசுவின் துயர்துடைக்கும் நண்பர்களாக உள்ளனர் என்பதை நீங்கள் உணரும் காலம் எப்போது வரும்!...*

**செபம்**

*அன்பு இயேசுவே! உமது சீடர்கள் என்று பெருமிதம் கொள்ளும் நாங்கள் செய்யத் தவறிய காரியங்களை, எத்தனையோ சீமோன்கள் போன்ற உம்மைத் தெரியாதவர்கள், அறியாதவர்கள் மனம் ஒன்றி செய்து வருகின்றனர். நாங்களும் இயற்கையை அழிவில் இருந்து காத்து உமது சிலுவையை சுமக்க உதவிய சீமோன்களாக மாற வரம் தரும்.....*

### *6. முகத்தை துடைக்கும் வெரோணிக்கா*




*இயேசுவை, ஆண்களுக்கு இணையாக பெண்களும் பின் தொடர்ந்தார்கள் என்பதற்கு நல்ல உதாரணம் வெரோணிக்கா. ஆண்கள் அஞ்சி ஓடி ஒளிந்த நேரத்தில் இயேசுவிற்கு ஆறுதலை, வார்த்தையில் அல்ல, மாறாக செயலில் காட்ட துகிலோடு வருகிறாள் வீர மங்கை வெரோணிக்கா. இயற்கையாகிய எங்களுக்கும் உதவ, எத்தனையோ வீர வெரோணிக்காக்கள் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மத்திய பிரதேசத்தில் நர்மதை ஆற்றின் குறுக்கே அணைகட்டி வளர்ச்சி என்ற பெயரால் பல ஆயிரம் ஹெக்டேரில் உள்ள காட்டை அழித்து அதை நம்பி வாழும் காட்டு விலங்குகளையும், 40 ஆயிரம் குடும்பங்களை புலம் பெயரச் செய்யும், அநீதிக்கு எதிராக 30 ஆண்டுக்கும் மேலாக போராடி வரும் மேதா பட்கர், எங்களுக்கு எதிராக எங்கள் வளங்களை எல்லாம் சுரண்டும் அரசுகளுக்கும், பெரும் பணக்காரர்களுக்கும் எதிராக தனது வீரியமிக்க எழுத்துகளால் போராடி வரும் அருந்ததிராய் போன்ற பெண்கள் அனைவரும், வீர மங்கை வெரோணிக்காவின் விழுதுகள் என்பதை, உங்கள் மனதில் பதியம்போட்டு வையுங்கள். 13 வயது நிரம்பிய சிறுமி ஐநா சபையில் புவியை காப்பாற்றுங்கள், எங்கள் தலைமுறைக்கு எதையாவது கொடுக்க இயற்கையை விட்டு வையுங்கள், என்று உருக்கமாக உரையாற்றி அகில உலக ஆண் தலைவர்களை எல்லாம் தலைகுனியச் செய்தாளே, அச்சிறுமி இக்காலத்து வெரோணிக்கா என்பதில் மாற்று கருத்து இல்லை.*

***செபம் :***

*அன்பு இயேசுவே! எங்கள் குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகள் ஆண் குழந்தைகளுக்கு, எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்ற மனநிலையுடன், இயற்கையை காக்கும் பணியில் அவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்பதை உணர்ந்து கொள்ளும் வரம் தாரும் .........*

### *7. இரண்டாம் முறை விழுதல்*




*மனிதர்கள் பலவீனத்தால் வாழ்வில் விழுவது இயல்பு. இறை இயல்போடு மனிதனாக பிறந்த இறை மனிதர் இயேசு, விழுந்து விட்டார் இரண்டாம் முறையாக. உடலையும், இரத்தத்தையும், உணவாக கொடுத்தவர் உருக்குலைந்து கிடக்கின்றார். கல் தடுக்கி விழுந்தார் இல்லை கல்லான மனித நெஞ்சங்களை கண்டு விழுந்தாரா? தெரியவில்லை. இந்த இரண்டாவது விழுதலிலும் தாங்கி கொண்டது இயற்கையாகிய எங்களின் நிலக்கரங்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சாலை அமைக்கிறோம். வீடு கட்டுகிறோம், தொழிற்சாலை அமைக்கிறோம், நகர மயமாக்குகிறோம் பொருளாதார மண்டலங்கள் அமைக்கிறோம் என்று எத்தனையோ பெயர்களில் நீங்கள் வெட்டுகின்ற மரங்கள் அனைத்தும் சாய்ந்து விழும் போது, இந்த விழுந்து கிடக்கும் இயேசுவின் முனகலை செவி கொடுத்து கேளுங்கள். ஆதியில் கடவுள் ஆதாமை மண்ணால் படைத்து அவனது நாசியில் தனது மூச்சை ஊதினார். அன்று ஊதிய அந்த பரமனின் உயிர்காற்றை உற்பத்தி செய்து உங்கள் மூச்சுப்பைகளை (நுரையீரல்) எல்லாம் நிரப்பி கொண்டிருப்பது, இயற்கையான எங்களின் மரங்கள் என்பதை ஏன் மறந்து போனீர்கள். உங்கள் பாவங்களை எல்லாம் சுமந்து கொண்டு, மீட்பு என்னும் வாழ்வை கொடுத்த இயேசுவும், நீங்கள் வெளி விடும் கரியமிலவாயுவை தன்னுள் ஏற்று வாழ்வளிக்கும் ஆக்ஸிஜனை தரும் எங்கள் மரங்களும் உங்களால் விழுந்து கிடக்கிறார்கள். இனிமேலாவது மரங்களை வளர்ப்பதும் விழுந்த இயேசுவை தூக்கி விடுவதும் சமம் என்பதை உணருங்கள்.*

***செபம் :***

*அன்பு இயேசுவே! மனிதர்களாகிய நாங்கள் இல்லாமல் மரங்கள் வாழமுடியும், ஆனால் மரங்கள் இல்லாமல் நாங்கள் வாழ முடியாது! என்பதை உணர்ந்து இதுவரை வெட்டிய மரங்களுக்கு இணையாகப் புதிய மர கன்றுகளை நட்டுப் பேணி வளர்த்து பாவகழுவாய் நிறைவேற்ற வரம் தாரும்......*

### *8. மகளிருக்கு ஆறுதல்*




*இயேசுவின் ஆடையின் விளிம்பைத் தொட்ட பெரும்பாடுடைய பெண், விபச்சாரத்தில் பிடிபட்டு இயேசுவின் அன்பால் புதுவாழ்வு பெற்றப் பெண், இறந்த மகனை உயிருடன் பெற்ற விதவைத்தாய், உயிர்பெற்ற சிறுமியின் தாய், பரிமள தைலத்தால் பாதத்தை துடைத்த பெண், என இவர்களில் யார் வேண்டுமானாலும் இயேசுவிற்கு ஆறுதல் மொழி சொல்ல வந்த பெண்டிற்குழுவில் இருந்திருக்கலாம். ஆனால் இயேசுவால் வாழ்வு பெற்ற ஆண்கள் ஒருவர் கூட ஆறுதல் சொல்லவில்லை. காரணம் ஆண்களுக்கு மூளை பெரியது, பெண்களுக்கு இதயம் பெரியது. ஆண்களின் அரியாசனத்தில் அறிவும், பெண்களின் அரியாசனத்தில் உணர்வும் ஆட்சி செய்கின்றது. மூளை சொல்வதை இதயம் கேட்டால் அது அறிவியல், இதயம் சொல்வதை மூளைக் கேட்டால் அது ஆன்மீகம். இதனால்தான் என்னவோ அன்று இயேசுவுக்கும், இன்று இயற்கையாகிய எங்களுக்கும் ஆறுதலாய் பெண்கள் இருக்கிறார்கள். அரசன் மரங்களை வெட்ட ஆணையிட்ட போது மலைவாழ் பெண்கள் ஆளுக்கொரு மரமாய் கட்டியணைத்துக் கொண்டு அன்று மரங்களை காத்தனர். இதுதானே 'சிப்கோ மக்கள் இயக்கம்' என்ற பெயரால் இயற்கையான எங்களை காக்க தோன்றிய முதல் இயக்கம். கூடங்குளம் அணுஉலை அமைத்து மின் உற்பத்தி செய்து இயற்கை வளமாகிய கடலையும், நிலத்தையும் நஞ்சாக்கும் திட்டத்திற்கு எதிராக போராடியவர்களில் சாதாரண மீனவ சமூகத்தை சார்ந்த சாதாரண குடும்ப தலைவிகளின் எண்ணிக்கை அதிகம் என்பதை யாரும் மறுக்க முடியாது. எங்களை பாதுகாக்கப் போராடும் இந்த பெண்களும், இயேசுவுக்கு ஆறுதல் கூறிய பெண்களுக்கு நிகரானவர்கள் என்பது நிதர்சனமாகும்.*

***செபம் :***

*அன்பு இயேசுவே! இயற்கையைக் காக்கும் இதயங்கள் எல்லாம், உமக்கு ஆதரவாய் துடிக்கும் இதயங்கள் என்பதை உணர்ந்து அதன்படி வாழத் தேவையான அருள் தந்து எங்களை வழிநடத்தும்.*

### *9. மூன்றாம் முறை விழுதல்*




*யானைக்கு அடிசருக்கலாம். சிங்கத்திற்கு அடிசருக்கலாமா? அநீதிக்கு எதிராக கர்ச்சிக்கும் அன்பின் சிங்கம், சருக்கி விழுகிறது மூன்றாம் முறையாக. அன்பு செய்பவர்கள், தியாகமாய் வாழ்பவர்கள், வாழ்க்கை பயணத்தில் விழுவதற்கு சாத்தியம் உண்டு என்பதை உறுதி செய்கிறது இயேசுவின் மூன்றாம் விழுதல். பொய்யை விழுந்து விடாமல் காக்க மனிதர்களாகிய நீங்கள் எடுக்கும் முனைப்புகளை, விழுந்து கிடக்கும் உண்மையை தூக்கி விடுவதில் நீங்கள் காட்டுவதில்லை என்பதற்கு உங்கள் அண்மை கால நீதிமன்ற தீர்ப்புகளே சான்றாக உள்ளன. இயற்கையான எங்களின் பிரமிப்பான மலைகளை எல்லாம் கிரானைட் எடுக்கிறோம், என்ற பெயரால் இருந்த இடமே தெரியாமல் அழித்துவிட்டீர்களே. செல்வந்தர்களின் வீட்டு கழிப்பறைகளை பளபளப்பாய் காட்ட இயற்கையான எங்களின் எழிலான மலைகளை எல்லாம் மரணமடைய செய்து விட்டீர்கள். அன்று சிலுவையின் பாரம் தாங்காமல் விழுந்த இயேசு மூன்று முறைதான் விழுந்தார். இன்று ஆற்றுபடுகைகளில் மணலை சுரண்டி எடுத்த குழிகள், தாதுக்கள் எடுக்கவும். நிலக்கரி எடுக்கவும் வெட்டப்பட்ட குகைகள், மலைகளை கரைத்த குழிகள் இவற்றில் தடுக்கி பலமுறை விழுந்து கிடக்கிறார். இந்த இயேசுவின் விழுதலுக்கு யார் காரணம் என்று எண்ணிப் பாருங்கள். தெரியவில்லை என்றால் உங்கள் பெயர்களை ஒருமுறை சொல்லிப் பாருங்கள்.*

***செபம் :***

*அன்பு இயேசுவே! நாங்கள் இயற்கையை அழிக்க முன்னெடுக்கும் ஒவ்வொரு காரியங்களும், நீர் விழுவதற்கு நாங்கள் செய்யும் தயாரிப்புகள் என்பதை உணர்ந்து அவற்றை தவிர்ப்பதற்கான வரமருளும்.*

### *10. ஆடை இழக்கிறார்*




*ஆதிமனிதனுக்கு தோலாடை செய்து கொடுத்த பரமனின் மகனின் உடலில் தோலாய் இருந்த ஆடை களையப்படுகிறது. மனிதன் பாவத்தால் நிர்மலமாகிவிடாமல் காக்க வந்த இறைமகன் இடையை மறைக்க கூட உடையின்றி நிர்வணமாய் நிற்கிறார். நீங்கள் ஆடையணிய மூலப்பொருள் தரும் இயற்கையாகிய எங்களையும் நிர்வாணமாக்க தயங்குவதில்லை. இயற்கையாகிய எங்களின் ஆடையான ஓசோன் எங்களுக்கு மட்டுமா பாதுகாப்பு உங்களுக்கும் தானே; அது ஏன் உங்களுக்கு புரியவில்லை, காடுகளை அழித்து, ஆக்ஸிஜனின் அளவை குறைத்து பெரும் தொழிற்சாலைகள், வாகன புகைகளால் கரியமல வாயுவை அதிகரித்து எங்களின் ஆடையான ஓசோனை ஓட்டையிட்டு எங்களை நிர்வாணமாக்கும் உங்கள் போக்கிற்கு முடிவே இல்லையா? உங்கள் தற்புகழ்ச்சியை பறைசாற்றும் பிளாஸ்டிகிலான விளம்பர மற்றும் வாழ்த்து பதாகைகள் எங்களை ஆடை இழக்கச் செய்யும் காரணிகள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் ஒருநாள் விழா விளம்பரத்திற்கு நீங்கள் பயன்படுத்தும் பிளக்ஸ்கள் எத்தனை எத்தனை கணக்கீட்டு பாருங்கள். நான் ஓசோன் என்னும் ஆடையை உங்களால் இழக்க, இழக்க அழிவு மனிதர்களாகிய உங்களுக்குதான். கதிரவனின் புறஊதா கதிர் தாக்கி தோல் புற்றுநோய், புவி வெப்பமாதல் அதனால் பனிப்பாறை உருகுதல் அதனால் கடல் நீர்மட்டம் உயர்தல், அதனால் வெள்ளம் சுனாமி, காலப்பருவநிலை மாற்றம் வறட்சி புயல் என விளைவுகள், விபரிதமாகும் என்பதை மறந்துவிடாதீர்கள்.*

***செபம் :***

*அன்பு இயேசுவே! அன்று உம்மை நிர்வாணமாக்கிய நபர்களை குறைகாணும் நாங்கள் இயற்கையின் ஆடையான ஓசோனை ஓட்டையிட்டு உம்மை மீண்டும் நிர்வாணமாக்குகிறோம் என்பதை உணர்ந்து, ஓசோனைப் பாதுகாக்க கரியமலவாயுவின் அளவை வளிமண்டத்தில் குறைக்கவும், மரங்களை வளர்க்கவும் தேவையான வரம் தாரும்....*

### *11. சிலுவையில் அறைதல்*




*அரவணைத்து ஆசி வழங்கிய கரங்களில் கூரிய ஆணிகள் வலுவாய் இறுக்கப்படுகின்றன. அனைவரையும் தன்னைப்போல் அன்பு செய்த அன்பு கடவுளுக்கு, அவர் அன்புக்குரியவர்கள் கொடுத்த பரிசு மூன்று ஆணிகள், ஒரு சிலுவை மரம், உங்களை தாங்கிக் கொள்ள வேண்டுமென எங்களை படைத்த இறைவனின் மகனை இறுதியில் இயற்கையான எங்களின் மரங்கள் தான் சுமந்து கொண்டன. இந்த இயேசு அவரது கரமும், காலும் துளைக்கப்பட்ட போது மட்டும் துடித்திருப்பார் என்று எண்ணினால் உங்கள் எண்ணத்தை மாற்றி கொள்ளுங்கள். ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அனைவருக்கும் பகிரப்பட வேண்டிய நிலத்தடி நீரை பெரும் முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் உறிஞ்சும் போதும் இயேசு துளையிடப்பட்ட வலியில் துடிக்கிறார். மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை செயல்படுத்தி, காவிரி டெல்டா விவசாயிகளின் விளைநிலத்தை பாழாக்கி, துளையிட்டு, எரிவாயு எடுக்கும்போது இயேசு துளையிடப்படுகின்றார். எரிவாயுவை குழாய்வழியாக எடுத்து செல்லுகிறோம் என்ற பெயரால் ஏழை விவசாயிகளின் விளைநிலங்களை எல்லாம் ஆக்கிரமித்து குழாய்களை பதிக்க துளையிடும் போதும் இயேசு துளையிடப்படுகிறார். மலைகளை எல்லாம் குடைந்து தரைமட்டம் ஆக்கும்போது இயேசு துளையிடப்படுகின்றார். இத்தனை துளையிடுதலும் நீங்கள் துணையாக இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? இயற்கையாகிய நாங்கள் எத்;தனையோ சிலுவைகளை தந்து விட்டோம். மனிதர்களாகிய நீங்கள் இதுவரை எத்தனை இயேசுவை தந்திருப்பீர்கள், என்று எண்ணி பாருங்கள்.*

***செபம் :***

*அன்பு இயேசுவே! இயற்கையினை அபகரிக்க நிலத்தை துளைக்கும் போதெல்லாம் உம்கரத்தை, காலையும் துளைக்கிறோம் என்பதை உணர்ந்து அவை நிகழாமல் தடுக்கும் ஆற்றலை நிறைவாய் தாரும்....*

### *12. உயிர்விடுதல்*



*ஆதிமனிதனைப் படைத்து தனது ஆவியை மூச்சாய் கொடுத்து உயிர்தந்த இறைவனின் திருமகன், தம் ஆவியை தந்தையிடம் ஒப்படைத்து மூச்சை நிறுத்துகிறார். நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பது சிறந்த அன்பு என்று சொன்னவர், தன்னை கொன்றவர்களுகாகவும், உயிரைக் கொடுத்தார் இது தான் இறையன்போ? வாழ்வால் சாவுக்கு அர்த்தம் கொடுத்து, சாவால் பிறருக்கு வாழ்வு கொடுத்தவர் இயேசு. இயேசுவின் உயிர்விடுதல் அன்று ஒருநாள் மட்டும் நடந்தேறிய அரங்கேற்றம் அல்ல, இன்று ஒவ்வொரு நாளும் தொடரும் அவலம். உரம் என்ற பெயரால் நிலத்தை நஞ்சாக்கி நீங்கள் கொன்ற நுண்ணுயிர்கள், காடுகளை அழித்ததால் அழிந்துவரும் வனவிலங்குகள், சிட்டுகுருவிகள், வண்ணத்துப்பூச்சிகள், மின்வேலி அமைத்து கொல்லப்படும்; யானைகள், ஆற்றையும் கடலையும் கழிவு நீராக்கி கொன்று குவித்த நீர்வாழ் உயிரினங்கள், புவி வெப்ப உயர்வால் அழிந்த வரும் உயிரினங்கள், பனிக்கரடிகள், பென்குயின்கள். இப்படி இவையனைத்தும் உயிர்மூச்சை விடும் போது இயேசுவின் மரணம் மறுபடியும் நிகழ்கிறது. மேலும் இயற்கை வளங்களான நீரும், நிலமும் கொள்ளையடிக்க படும்போது பாதிப்புக்கு உள்ளாவது ஏழை விவசாயிகளும், இயற்கை சார்ந்த பழங்குடியினரும் இவர்கள் வாழவழியின்றி கடன்சுமையால் தற்கொலை செய்துகொள்ளும்போது 'என்இறைவா! என்இறைவா! ஏன் என்னை நெகிழ்ந்தீர்' என்ற இயேசுவின் குரல் ஒலித்துக்கொண்டு தான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்*

***செபம் :***

*அன்பு இயேசுவே அன்று உம்மை கொன்ற மக்களுக்கும், இன்று இயற்கை அழிக்கப்படுவதால் கொல்லபட்டு வரும் உயிர்களை கொன்ற எங்களுக்கும் வேறுபாடு இல்லை என்பதை உணர்ந்து அழிந்துவரும் இயற்கையை காக்க வரம் தாரும்.....*

### *13. தாயின் மடியில்*




*மடியில் போட்டு தாலட்டியவளின் உதடுகள், மரித்த மகனை மடியில் போட்டு ஒப்பாரி வைக்கிறது. 30 ஆண்டுகாலம், தான் பாதுகாத்த மகனை, இந்த சமூகம் மூன்றாண்டுகள் கூட பாதுகாக்க முடியவில்லையே என்று கண்ணீர் வடிக்கிறார். கானவூர் கல்யாணத்தில் பிற கண்ணீர் துடைத்தவளின் கண்ணீரை, கல்வாரியல் துடைக்க கரங்கள் ஏதும்; இல்லை. இந்த தாய் இயேசுவுக்கு மட்டுமல்ல , மனிதர்களாகிய உங்களுக்கும், இயற்கையாகிய எங்களுக்கும் தாய் என்பதை நினைத்துப் பாருங்கள் ஒரு உண்மை புரியும். நீங்கள் துன்புற்றாலும் கண்ணீர்வடிப்பாள் நாங்கள் துன்புற்றாலும் கண்ணீர் வடிப்பாள். உங்களுக்கே தெரியும் உங்களால் எவ்வளவு அதிகமாய் நாங்;கள் துன்புற்று வருகிறோம் என்ற உண்மை. அவளின் கண்ணீரை துடைக்க சில வழிகள் உண்டு. மரத்தை வெட்டாமல், மரகன்றுகளை நடுங்கள், பாலீதின், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறையுங்கள், மழைநீரை சேமித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துங்கள், இயற்கை விவசாயத்தை நடைமுறைபடுத்துங்கள், மின்சாரத்தையும்,குடிநீரையும் விணாக்காதீர்கள், சூரியஒளி மின்சாரத்தை பயன்படுத்துங்கள், கார்பன்டை ஆக்ஸைடு உயர்வை தடுக்க பொது போக்குவரத்து வாகனத்தைப் பயன்படுத்துங்கள், குப்பைகளை மறுசுழற்சி செய்யுங்கள் இவை எல்லாம் வியாகுல அன்னையின் கண்ணீரை துடைக்க உதவும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.*

***செபம் :***

*அன்பு இயேசுவே உமது தாய் படைப்பனைத்தின் தாய் என்ற முறையில் அவளின் பிள்ளையான இயற்கையை துன்புறுத்தி அவள் கண்ணீரை பெருக்காமல், இயற்கையை பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு அவள் கண்ணீரை துடைக்க எங்களுக்கு வர மருளும்....*

### *14. அடக்கம் செய்தல்*



*அனைத்தும் படைத்த இறைவனின் மகனுக்கு இறந்தபின் அடக்கம் செய்யப்பட சொந்த நிலம் இல்லை. பிறந்தபோதும் நிலம் இல்லை இறந்த போதும் நிலமில்லை. நிலத்தை படைத்தவருக்கே புரிந்திருக்கிறது நிலம் யாருக்கும் சொந்தமில்லை என்கின்ற செய்தி. ஆறடி நிலத்தில் முடியும் இந்த மனித வாழ்க்கையில், இந்த மனிதர்களாகிய நீங்கள் இயற்கையாகிய எங்களை எவ்வளவு சீரழிக்கிறீர்கள் என்பதை எண்ணிபாருங்கள். எங்களை உங்களிடம் கடவுள் கொடுத்தது பாதுகாக்க தானே தவிற, பாழாக்க அல்ல என்பது, நீங்கள் இன்றேனும் கற்க வேண்டிய பாடம். எங்களை பேணாத போது, நீங்களே உங்களை பேரழிவு நோக்கி அழைத்து செல்கிறீர்கள் என்று அர்த்தம். இத்தனை கொடுமைகள் இயேசுவுக்கு நிகழ்ந்து அவர் இறந்தாலும் யாரையும் அவர் வெறுக்கவில்லை தூக்கி எறியவும் இல்லை. அதேபோல் அவரின் படைப்புகளாகிய நாங்களும் என்னதான் நீங்கள் எங்களை வதைத்து அழித்தாலும், உங்கள் இறப்பிற்கு பின் உங்கள் உடல்களை தூக்கி எறியாமல், உங்களை எங்களோடு இணைத்து கொள்கிறோம். இன்றிலிருந்தாவது படைப்புகளை பராமரிப்பதும், அவற்றை காத்து பேணுவதும் இறைவனின் திருவுளம் என்பதை உணர்ந்து செயல்படுங்கள். எங்களை வாழ்வித்து நீங்களும் வாழ்வு பெறுங்கள். அடக்கம் செய்யபட்டவர் மூன்றாம் நாள் உயிர்த்தது போல் இயற்கையாகிய எங்களை பாழ்படுத்தும் உங்கள் செயல்கள் மடிந்து, இயற்கையாகிய எங்களை காக்கும் செயல்கள் உயிர்க்கட்டும்.*

***செபம்:*** *அன்பு இயேசுவே! இயற்கையை பாழக்க அல்ல மாறாக பாதுகாக்கவே எங்களுக்கு அளித்தீர் என்பதை உணர்ந்து வாழ வரம் தாரும்....*